பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
28. 12. 2024 **SATURDAY** 7. 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மறைந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் இன்று புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

2. மன்மோகன் சிங்கின் உடல் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக இன்று காலை காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் வைக்கப்படவுள்ளது.

3. ஹிமாச்சலப்பிரதேசத்தில் கடும் பனிப்பொழிவில் சிக்கித் தவித்த ஐயாயிரம் சுற்றுலாப் பயணிகளை அம்மாநில காவல்துறையினர் பத்திரமாக மீட்டு, பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றனர்.

4. தேசிய புலனாய்வுத்துறையினர் நேற்று ஜார்க்கண்ட் மாநிலத்தில் நக்ஸல் தீவிரவாதம் தொடர்பாக பல்வேறு இடங்களில் சோதனை நடத்தினர்.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளான இன்று இந்தியா முதல் இன்னிங்ஸில் சற்றுமுன்வரை 7 விக்கெட் இழப்புக்கு 247 ரன் எடுத்து ஆடிவருகிறது.

>>>>>><<<<<<

மறைந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது

அரசு துக்கம் இன்று கடைபிடிக்கப்படுவதால், அரசு அலுவலகங்களில் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு அலுவலகங்களுக்கும், பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அரைநாள் விடுமுறை விடப்பட்டுள்ளது.

மன்மோகன் சிங்கின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடல், இன்று காலை காங்கிரஸ் தலைமை அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டு, பொதுமக்கள் மற்றும் கட்சியினர் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர், அவரது உடல் ஊர்வலமாக கொண்டு செல்லப்படுகிறது.

இறுதி ஊர்வலத்தை ஆகாஷவாணி நேரடியாக ஒலிபரப்பு செய்யவுள்ளது.

இதுகுறித்த நேர்முக வர்ணனை ரெயின்போ பண்பலை அலைவரிசையிலும், இந்திர பிரஸ்தா மற்றும் ஆகாஷவாணி 24 மணிநேர அலைவரிசையிலும் இன்று காலை 11 மணி முதல் ஒலிபரப்பாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகரில் உள்ள வானொலி அலைவரிசைகள் உட்பட அனைத்து முதன்மை அலைவரிசைகளிலும், ஆகாஷவாணியின் அனைத்து உள்ளூர் நிலையங்களும் இந்த நேர்முக வர்ணனையை அஞ்சல் செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில், மறைந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கிற்கு புதுதில்லியில் நினைவிடம் எழுப்ப, அரசு இடம் ஒதுக்கும் என்று கூறியுள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேயிடமிருந்து அரசுக்கு கோரிக்கை வரப்பெற்றதாகவும், இதனை அரசு ஏற்றுக் கொண்டதாகவும் உள்துறை அமைச்சக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நேற்று, புதுதில்லியில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்று முடிந்தவுடன், இந்த தகவலை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, திரு. மல்லிகார்ஜுன கார்கே மற்றும் மன்மோகன் சிங்கின் குடும்பத்தாரிடம் தெரிவித்ததாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், மன்மோகன் சிங் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு நேற்று பல்வேறு அரசியல் கட்சியின் தலைவர்களும், பல்வேறு நாடுகளின் தூதரக அதிகாரிகளும் அஞ்சலி செலுத்தினர்.

>>>>>><<<<<<

தேசிய புலனாய்வுத் துறையினர் நேற்று ஜார்க்கண்ட் மாநிலத்தில் நக்ஸல் தீவிரவாதம் தொடர்பாக பல்வேறு இடங்களில் சோதனை நடத்தினர்.

சந்தேகத்திற்குரிய வீடுகள் மற்றும் இதர இடங்களில் நடைபெற்ற சோதனையில் ஏராளமான மொபைல் போன்களும், சிம் கார்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட சாதனங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய புலனாய்வு முகமை தெரிவித்துள்ளது.

ஜார்க்கண்டில் லுசியோ அடர்ந்த வனப்பகுதியில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நக்ஸல் தீவிரவாதியான கிருஷ்ண அன்ஸ்டே, கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டதாக தேசிய புலனாய்வு முகமையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பள்ளி – கல்லூரி மாணவிகள் காவல் உதவி செயலியை தங்களது செல்ஃபோனில் பதிவிறக்கம் செய்வதை அனைத்து கல்லூரிகளும் உறுதி செய்ய வேண்டும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், பெண்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

ஆபத்து காலங்களில் உடனடியாக காவல்துறையை தொடர்பு கொள்ள உதவும் இந்த காவல் உதவி செயலியை அனைத்து பெண்களும், குறிப்பாக பள்ளி – கல்லூரி மாணவிகள் தங்களது செல்ஃபோனில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆபத்து நேரங்களில் அந்த செயலியில் உள்ள சிவப்பு நிற பொத்தானை அழுத்துவதன் மூலம் உடனடியாக காவல்துறையின் உதவி கிடைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

ஹிமாச்சலப்பிரதேசத்தில் கடும் பனிப்பொழிவில் சிக்கித் தவித்த ஐயாயிரம் சுற்றுலாப் பயணிகளை அம்மாநில காவல்துறையினர் பத்திரமாக மீட்டு, பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றனர்.

**Kullu** மாவட்டத்தில் நேற்றும் கடும் பனிப்பொழிவு காணப்பட்டது.

இதன் காரணமாக, **Solangnala** மற்றும் **Sky Resort** பகுதியில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் பனிப்பொழிவில் சிக்கிக் கொண்டனர்.

இதனால், அவர்களது வாகனங்கள் பனிப்பொழிவில் சிக்கிக் கொண்டது.

தகவல் அறிந்து, அந்தப் பகுதிக்கு விரைந்து சென்ற காவல்துறையினர் அவர்களை பத்திரமாக மீட்டனர்.

தொடர்ந்து அந்த பகுதிகளில் மீட்பு பணி நடைபெற்று வருவதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்நிலையில், இன்றும் கடுமையான பனிப்பொழிவு இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்தில் சம்பா, சிம்லா, கின்னூர், காங்ரா உள்ளிட்ட ஆறு மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது.

அப்பகுதியில் கடும் குளிர் நிலவுவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சிம்லாவில் வெப்பநிலை 5 டிகிரி செல்சியஸாக குறைந்துள்ளது. இது மேலும் குறையக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஜம்மு காஷ்மீரிலும் கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது.

இதனால், சாலைகளில் ஆங்காங்கே வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

காவல்துறையினர் அந்த வாகனங்களை அகற்றி, போக்குவரத்து சீராக நடைபெற உதவி வருகின்றனர்.

வானிலை மோசமாக இருப்பதால், சுற்றுலா பயணிகளும், பொதுமக்களும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பாரமுல்லா மாவட்டத்தில் நேற்று புதிதாக பனிப்பொழிவு ஏற்பட்டது.

ஜம்மு காஷ்மிரில் நாளை மறுநாள் லேசான மழையும், பனிப்பொழிவும் இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

மகாராஷ்ட்ர மாநில ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து பேசினார்.

இது மரியாதை நிமித்தமான சந்திப்பு என்றும், பிரதமரை சந்தித்தது மகிழ்ச்சி அளிப்பதாகவும் தமது எக்ஸ் வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தில்லி மாநில அரசு மின்சார கட்டணத்தை குறைத்துள்ளது.

இதனால் பொதுமக்களுக்கு மாதாந்திர செலவு கணிசமாக குறையும் என்று அம்மாநில முதலமைச்சர் திருமதி. அதிஷி கூறியுள்ளார்.

ஆம் ஆத்மி அரசு சாமானிய மக்களுக்கான அரசு என்று இதன்மூலம் நிரூபித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பஞ்சாப் மாநிலத்தில் பேருந்து ஒன்று ஓடை ஒன்றில் விழுந்ததில் 8 பேர் உயிரிழந்தனர்.

தள்வாண்டியிலிருந்து பத்திண்டா நோக்கி சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந்து, பாலத்தில் சென்று கொண்டிருந்தபோது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்ததால், ஓடையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அப்போது பலத்த மழை பெய்து கொண்டிருந்த நிலையில், விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொதுமக்களும், காவல்துறையினரும் பேருந்துக்குள் சிக்கியிருந்தவர்களை மீட்டனர்.

இருப்பினும், 8 பேர் உயிரிழந்தனர்.

விபத்து நடந்த பகுதியில், பாலத்தில் தடுப்புச்சுவர் இல்லாததே விபத்துக்கு காரணம் என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக குற்றங்கள் நிகழும் போது, உடனடியாக காவல்துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒருசில வழக்குகளில் நிலவும் சூழல் அல்லது காவல்துறை அதிகாரியின் கவனக்குறைவால் தவறு நிகழ்ந்து விட்டதாக அரசின் கவனத்திற்கு வரும் போது, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

அண்ணாநகரில் சிறுமி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம், அரசின் கவனத்திற்கு வந்தவுடன் உடனடியாக மகளிர் காவல்நிலையத்திற்கு தகவல் அளித்து, நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வளரிளம் பெண்களுக்கு போக்ஸோ சட்டத்தின் கீழ், என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பது குறித்து பள்ளிக் கல்வித்துறை, சமூகநலத்துறை மற்றும் காவல்துறை இணைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் திருமதி. கீதாஜீவன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மெல்போர்னில் நடைபெறும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று இந்தியா முதல் இன்னிங்ஸில் சற்றுமுன்வரை 7 விக்கெட் இழப்புக்கு 247 ரன் எடுத்துள்ளது.

இதனால் இந்தியா ஆஸ்திரேலியாவை விட 230 ரன் பின்தங்கியுள்ளது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 474 ரன்.

>>>>>><<<<<<

ஹாக்கி இந்தியா லீக் போட்டி இன்று ஒடிசா மாநிலம் ரூர்கேலாவில் தொடங்குகிறது.

7 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நடைபெறவுள்ள இந்த போட்டி, பிப்ரவரி மாதம் ஒன்றாம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இதில் தமிழ்நாடு, தில்லி, பெங்கால், ஹைதராபாத் உள்ளிட்ட எட்டு அணிகள் பங்கேற்கின்றன.

>>>>>><<<<<<

புரோ கபடி லீக் போட்டியில் ஹரியானா மற்றும் பாட்னா அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளன.

புனேயில் நேற்று நடைபெற்ற முதல் அரையிறுதி ஆட்டத்தில் ஹரியானா 28-25 என்ற புள்ளிக்கணக்கில் உத்தரபிரதேச அணியை தோற்கடித்து, தொடர்ந்து இரண்டாவது முறையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

மற்றொரு அரையிறுதியில் பாட்னா அணி, 32 – 28 என்ற புள்ளிக்கணக்கில் தில்லி அணியை தோற்கடித்து, ஐந்தாவது முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ளது.

நாளை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் ஹரியானா – பாட்னா அணியை எதிர்கொள்கிறது.

**>>>>>>END<<<<<<**